## சட்டப்பேரவை தேர்தல்கள் முடிந்தவுடன்

# பெட்ரோல், டீசல் விலை ரூ.25 உயர்த்த திட்டமா?

## ஒன்றிய அரசு விளக்கம்!

புதுடெல்லி, ஏப். 25-

சட்டப்பேரவை தேர்தல் முடிந்தவுடன் பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தும் திட்டம் எதுவும் இல்லை என ஒன்றிய அரசு உறுதிபட தெரிவித்துள்ளது. ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் நாடுகள் கடந்த பிப்ரவரி 28ம் தேதி போர் தொடுத்தன. இதற்கு பதிலடியாக உலக நாடுகளுக்கு கச்சா எண்ணெய் எடுத்து செல்லும் முக்கிய வழித்தடமான ஹார்முஸ் நீரிணையை ஈரான் மூடியது. இதன் காரணமாக கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டதுடன் விலையும் அதிகரித்தது. இதன் காரணமாக பொதுமக்களும், உணவக உரிமையாளர்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சூழலில் தமிழ்நாடு, கேரளா, மேற்குவங்கம், அசாம் ஆகிய 3 மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்துக்கு பேரவை தேர்தல் அறிவிக்கப்பட்டது. இதில் மேற்கு வங்கத்தில் மட்டும் வரும் 29ம் தேதி 2ம் கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இந்த தேர்தல் முடிந்தவுடன் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படும் என தகவல் வெளியாகி உள்ளது.

இதுகுறித்து கோடக் இன்ஸ்டிடியூஷனல் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், “மேற்குவங்கம் போன்ற மாநிலங்களில் ஏப்ரல் 29ம் தேதி சட்டப் பேரவை தேர்தல் வாக்குப் பதிவு முடிந்தவுடன் பெட்ரோல், டீசல் விலை கடுமையாக உயரும். அதன்படி கச்சா எண்ணெய் பீப்பாய்க்கு 120 அமெரிக்க டாலருக்கு அருகில் உள்ள நிலையில், விலை லிட்டருக்கு ரூ.25 முதல் 28 வரை உயரும்” என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒன்றிய அரசு மறுப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஒன்றிய பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் தன் எக்ஸ் தளத்தில், “கோடக் நிறுவனத்தின் அறிக்கை பொதுமக்களை அச்சத்திலும், பீதியிலும் ஆழ்த்துவது மற்றும் தவறாக வழிநடத்தும் செயலாகும். கடந்த 4 ஆண்டுகளாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்தாலும், இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படவில்லை.

சர்வதேச விலை உயர்வில் இருந்து மக்களை காப்பதற்காக ஒன்றிய அரசும், பொதுத்துறை உண்ணெய் நிறுவனங்களும் தொடர் நடவடிக்கைகளை எடுத்துள்ளன. எனவே, சட்டப்பேரவை தேர்தல் முடிந்தவுடன் பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தும் திட்டம் எதுவும் இல்லை” என விளக்கம் அளித்துள்ளது.

★ பெட்ரோல் லிட்டருக்கு ரூ.20 டீசல் லிட்டருக்கு ரூ.100 நஷ்டம்

மேற்காசியாவின் முன்னேற்றங்கள் குறித்த செய்தி மாநாட்டில் ஒன்றிய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணை செயலர் சுஜாதா சர்மா கூறுகையில், “கச்சா எண்ணெய் மற்றும எல்பிஜி விலைகளில் தொடர்ந்து ஏற்ற, இறக்கங்கள் நிலவுகின்றன. மேற்காசியா சூழல்களால் இந்த விலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருள்களை தயாரிக்கும் கச்சா எண்ணெய் விலை, நுகர்வோர் மற்றும் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

கடந்த ஆண்டு பீப்பாய் ஒன்றுக்கு 70 அமெரிக்க டாலராக இருந்த கச்சா எண்ணெய், இந்த மாதம் சராசரியாக 113 டாலருக்கும் அதிகமாக இருந்தது. 2026 ஏப்ரல் நிலவரப்படி, உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்வால், ஒன்றிய அரசுக்கு சொந்தமான எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோலில் லிட்டருக்கு 20 ரூபாயும், டீசல் லிட்டருக்கு 100 ரூபாயும் நஷ்டம் அடைகின்றனர். இந்த பெரும் நஷ்டம் காரணமாக எண்ணெய் நிறுவனங்களின் லாபம் குறைந்து, தினசரி ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படும் சூழல் உள்ளது” என்றார்.

---

## தமிழ்நாட்டிற்குள் பாசிசம் வராமல் தடுக்க–

# தி.மு.க. - 200 இடங்களுக்கு மேல் வெல்லும்!

## பெரம்பலூர் – வேலூர் கிராமத்தில் வாக்களித்தபின் – ஆ.ராசா எம்,பி, பேட்டி!



பெரம்பலூர், ஏப். 25-

கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா. எம்பி.யின் சொந்த ஊரான, பெரம்பலூர் மாவட்டம், வேலூர் கிராமத்தில் வாக்கு செலுத்திய பின் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா.எம்.பி. செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாட்டில் கடந்த ஐந்தாண்டுகளில் தி.மு.க. அரசு நிறைவேற்றியுள்ள எண்ணற்ற அரசு திட்டங்களை கருத்தில் கொண்டும், முதல்வர் முத்துவேல்கருணாநிதி ஸ்டாலின் தமிழ்நாட்டில் செயல்படுத்தி வந்துள்ள வளர்ச்த்திட்டங்களை பாராட்டும் விதத்திலும் அதுமட்டுமின்றி பாசிச சக்திகளை தமிழ்நாட்டிற்குள்

விடாமல் தடுக்க மு.க.ஸ்டாலினால் மட்டுமே முடியும் என்ற நம்பிக்கையில் பெருவாரியான மக்கள் மிகுந்த எழுச்சியுடன் இன்று வாக்களித்து வருகின்றனர், எனது சொந்த கிரா மத்திலும் அந்த எழுச்சியை காண முடிகிறது.

கண்டிப்பாக பெரம்பலூர் மட்டுமல்ல தமிழ்நாட்டில் 200 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் தி.மு.க. வெற்றி பெறும்,

தமிழ்நாட்டில் இது வரை எந்த தேர்தலிலும் இல்லாத அளவிற்கு 2026 சட்டமன்ற தேர்தலில் வெளிமாநில முதல்வர்கள் மற்றும் வடமாநில பா.ஜ.க. அமைச்சர்கள்

பா.ஜ.க. தலைவர்கள் என ஏராளமான பாசிச சக்திகள் தமிழ்நாட்டில் கூடாரம் அமைத்தும், கொட்டமடித்து கொண்டும் பிரச்சாரம் செய்து தமிழ்நாட்டை எப்படியாவது பிடித்து விடலாம் என்று நினைக்கிறார்கள், ஆனால் அவர்கள் எண்ணம் பலிக்காது, அவர்களை எல்லாம் தமிழ்நாட்டு மக்கள் ஓட,ஓட விரட்டி விட்டார்கள் என்பதை உறுதிபடுத்துவதற்கான செய்தி இந்த தேர்தலில் தெரிகிறது என்றார். இவ்வாறு அவர் கூறினார்.

இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன்,

தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், வேட்பாளர் டாக்டர் எஸ்.டி. ஜெயலெட்சுமி மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

---



இராணிப்பேட்டை சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அமைச்சர் ஆர்.காந்தி தனது வாக்கை நவல்பூரில் உள்ள பள்ளியில் பதிவு செய்தார்.



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் ஏ.பி.நந்தகுமார் தனது ஊரான லத்தேரியில் வாக்கு பதிவு செய்தார்.




விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற வாக்குப்பதிவில் செஞ்சி ஒன்றியம் அங்கராயநல்லூர் அரசு தொடக்கப்பள்ளியில் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வாக்கினை பதிவு செய்தார்.



தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி கலிங்கப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் ம.தி.மு.க முதன்மை செயலாளர் துரை வைகோ எம்.பி தனது வாக்கினை பதிவு செய்தார்.



விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா நேற்று முன்தினம் கே.கே.நகர், ராஜா மன்னார் சாலையில் உள்ள அம்பத்தூர் லயன்ஸ் கிளப் பள்ளியில் தனது வாக்கினை பதிவு செய்தார்.



திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி சட்டமன்ற தொகுதி மீஞ்சூர் ஒன்றியம் வல்லூரில் உள்ள ஊராட்சி ஒன்றியம் பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தனது வாக்கினை செலுத்தினார்.



திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி பூண்டி ஒன்றியம் பாண்டூர் ஊராட்சி டி.இ.எல்.சி, காபிஸ் மேல்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையத்தில் வேட்பாளர் வி.ஜி. ராஜேந்திரன் தனது வாக்கினை குடும்பத்தினருடன் செலுத்தினார்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி அடுத்த பட்டாபிராம் காமராஜ் புரத்தில் உள்ள தனியார் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையத்தில் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் ஆ.கிருஷ்ணசாமி தனது வாக்கினை குடும்பத்தினருடன் வாக்கு செலுத்தினார்.



திருத்தணி சிஎஸ்ஐ பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்டம் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம். பூபதி வாக்கு செலுத்தினார்.



ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மோளக்கவுண்டம் பாளையம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் குடும்பத்துடன் சென்று தனது வாக்கினை பதிவு செய்தார்.



ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளரும் , கோபி சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் என்.நல்லசிவம் தனது குடும்பத்துடன் சென்று குள்ளம் பாளையம், அரசு உயர்நிலைப் பள்ளி வாக்குச்சாவடி எண் 129 ல் தன்து வாக்கை பதிவு செய்தார்.



கழக மாற்றுத்திறனாளிகள் அணி மாநில தலைவரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில தலைவர் ரெ.தங்கம் தனது துணைவியாரும், சென்னை தென்மேற்கு மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் திருமதி சரிதா தங்கம் ஆகியோர் தியாகராயர் நகர் பகுதி சி.ஐ.டி. நகரில் வாக்களித்து ஜனநாயக கடமை ஆற்றினர்.



மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் இரா. ஜெயராமகிருஷ்ணன் தூங்காவி ஊராட்சி நடுநிலைப்பள்ளியில் தனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார்.



தஞ்சாவூர்மாவட்டம்,ஒரத்தநாடுசட்டமன்றதொகுதியில்மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் முன்னாள் அமைச்சர் ஆர்.வைத்தியலிங்கம் தெலுங்கன் குடிக்காடு அரசு பள்ளியில் வாக்களித்தார்.



கரூர் சட்டமன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளர் ஆசி எம். தியாகராஜன் அருகம்பாளையம் வாக்குச்சாவடியில் தனது வாக்கை செலுத்தினார்.




பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், பெரம்பலூர் ரோவர் பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியில் தனது வாக்கை பதிவு செய்தார்.